Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 230/2025** |
| Deposition of witness for | :: | **PW.5** |
| **Name** | :: | **பாலமுருகன் ( காவல் ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**17.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நக்சல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.06.2023 ம் தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் ஜோதிமுத்து அவர்களால் பதிவு செய்யப்பட்டு முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலைய குற்ற எண். 129/2023 பிரிவுகள் 279, 304A இதசவின் கீழான வழக்கினை பார்வையிட்டு எனது தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பின்னர் சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடத்தில் கூறிய சங்கதிகளை என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2. பின்னர் அன்றைய தினமே மதியம் 01.15 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான முனியசாமி என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து குற்றமானது பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

3. பின்னர் 15.06.2023 ம் தேதி இவ்வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட

TN 67 BZ 4213 TVS Apache இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தினேன்.

4. பின்னர் 07.08.2023ம் தேதி இவ்வழக்கில் விபத்திற்குள்ளான TN 67 BV 6721 TVS XL 100 இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி அருப்புக்கோட்டை வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து விபத்தாய்வு அறிக்கைகள் பெற்று ஆய்வாளரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 67 BV 6721 – TVS XL 100 இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ 6 ஆகவும், TN 67 BZ 4213 – TVS Apache இருசக்கர வாகன வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**5.** பின்னர் அன்றைய தினம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் இறந்து போன வேல்முருகனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் பார்த்தசாரதி அவர்களை விசாரித்து அவர்களிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **(வேல்முருகனின் பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6**. மேலும் மேற்படி மருத்துவமனையில் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வேல்முருகன் இறந்துபோனதை உறுதி செய்து சவக்கிடங்கில் வைக்க பரிந்துரை செய்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் அருணாசலம் அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் ஜோதிமுத்து மற்றும் பிரேத பரிசோதனைக்கு உடன் சென்ற பெண் முதல் நிலை காவலர் மணிமேகலை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8. பின்னர் அன்றைய தினமான 07.08.2023ம் தேதி இவ்வழக்கின்

புலன் விசாரணை முடித்து எதிரி முனியசாமி மீது சட்டப்பிரிவுகள் 279, 304A இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் பொரும்பான்மையான விசாரணையை சார்பு ஆய்வாளர் ஜோதிமுத்து மேற்கொண்டுள்ளார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, இறந்தநபரின் பிரேத பரிசோதனை அறிக்கை மட்டும் தான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் ஜோதிமுத்து அவர்கள் விசாரணை செய்த சாட்சிகளை நான் முறையாக மறுவிசாரணை செய்யாமல் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**